**Starting time 11.20.A.M.**

## IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

**O.S. No.29/2019**

Deposition of **D.W.3** witnesses for defendant Solemnly affirmed by Tr.R.Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 20.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஏழுமலை** | Father's Name | : சிவபூசனம் |
| Village | : | Taluk | : |
| Calling | : | Age | : |

**2–ம் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை :** நான் இவ்வழக்கிற்கு 3–ம் தரப்பினர். நான் சென்னை மதுரவாயல், மேட்டுக்குப்பம் பிள்ளையார் கோவில் தெரு, கதவு எண்.36–ல் உள்ள வீட்டில் வசிக்கிறேன். எனக்கு தகப்பனார் பெயர் சிவபூசனம் ஆகும். நான் மேற்படி விலாசத்தில் வசிப்பதற்கு ஆதாரமாக எனது ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அசலை சரிபார்க்க ஒப்படைக்கிறேன். ஆதார் அட்டையின் நகல் **Ex.X5**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு பெருமாள்ராஜ் பேட்டையை சேர்ந்த பாலசுப்பிரமணி என்பவரை தெரியும். அவர் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆவார்.

2. 2–ம் பிரதிவாதி அமுதவள்ளி எனது உடன்பிறந்த அண்ணனின் மனைவி ஆவார். கடந்த 17.03.2000 அன்று மேற்படி பாலசுப்பிரமணி என் பெயருக்கு ஒரு

பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்தார். அதன் நகல் தாக்கல் செய்கின்றேன். அசல் சரிபார்க்க ஒப்படைக்கிறேன். அந்த ஆவணம் **Ex.X6**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பொது அதிகாரப் பத்திரத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் பாலசுப்பிரமணியம் கையெழுத்து செய்துள்ளார்.

3. எனக்கு மேற்படி பாலசுப்பிரமணியம் என்பவரது கையெழுத்துக்களை அடையாளம் தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள 1–வது சாட்சி கையெழுத்து மேற்படி பாலசுப்பிரமணியம் என்பவரது கையெழுத்து ஆகும். அந்த கையெழுத்து **பி.வா.சா.ஆ.12–**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சொந்த ஊரே மதுரவாயல் மேட்டுக்குப்பம் கிராமமா என்றால், ஆமாம். நான் 2–ம் பிரதிவாதியின் சொந்த மைத்துனர் என்றால், சரிதான். எனது அண்ணனுக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் திருமணமான பிறகு தான் 2–ம் பிரதிவாதி எனக்கு உறவினரா அல்லது அதற்கு முன்பே உறவினரா என்றால், திருமணத்திற்கு பிறகு தான் உறவினர். இவ்வழக்கை யார், என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால், தெரியாது.

2. நான் தாக்கல் செய்துள்ள Ex.X5, Ex.X6 ஆவணங்களை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், அமுதவள்ளி சார்பாக சாட்சியம் அளிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். என்ன நோக்கத்திற்காக நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால், பாலசுப்பிரமணியம் பெயரில் உள்ள ஆவணத்தை வழக்கில் மறுத்துள்ளதால், அவரது பெயரில் உள்ள ஆவணம் என்னிடம் உள்ளதால் அந்த விவரம் குறித்து நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

3. நான் தாக்கல் செய்துள்ள Ex.X6 ஆவணமும், பி.வா.சா.ஆ.6 ஆவணமும் ஒரே சமயத்தில் எழுதப்பட்டவைகள் அல்ல என்றால், சரிதான். Ex.X6 ஆவணத்தில் பாலசுப்பிரமனியம் என கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள பி.வா.சா.ஆ.12 கையெழுத்து பாலசுப்ரமன்யம் என உள்ளது என்றால், எனக்கு அவ்வளவாக எழுதப்படிக்க தெரியாது. எனவே, எனக்கு பாலசுப்பிரமனியம் என்பவரது கையெழுத்து எது என்று சரியாக தெரியாது என்றால், சரியல்ல, என் பெயருக்கு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதால் அவரது கையெழுத்தை எனக்கு அடையாளம் தெரியும். எனக்கு பாலசுப்பிரமனியம் கையெழுத்து பற்றி எதுவும் தெரியாது என்றும், 2–ம் பிரதிவாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending time : 11.42. A.M.

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Date: 2025.08.20 18:28:03 +0530